# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal)

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:6 Issue :23 July 2024*

கோட்டை:6 வாயில்:23 ஜூலை 2024

# அரண்

# Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*



## ஆசிரியர் குழு

முனைவர் ஸ்டீபன்
முனைவர் ஓ முத்தையா
முனைவர் உமாதேவி
முனைவர் இராஜேந்திரன் முனியாண்டி
முனைவர் மணிமாறன் சுப்ரமணியம்
முனைவர் சில்லாழி எஸ்.கந்தசாமி
முனைவர் பொ. சுரேஷ்
முனைவர் ப.தனஞ்செயன்
கலாநிதி ஸ்ரீவரதராஜன் பிரசாந்தன்
முனைவர் ஸ்வர்ணவேல் ஈஸ்வரன்
பேரா. முனைவர் வீ.செல்வகுமார்
முதுமுனைவர் *V.*வெங்கட்ராமன்
முனைவர் போ.கந்தசாமி
முனைவர் *P.*பாண்டிக்குமார்
முனைவர் ந. குமாரி
முனைவர் தயாநிதி
முனைவர் சந்திரசேகர்



### நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்
### இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

### முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்



**+917299587879**

www.aranejournal.com
aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

# அகத்தினுள்


ஐங்குறு நூற்றில் நீர் நிலைகள்
பா. ரம்ஜான்

சங்ககால தமிழரின் பகுத்துண்டு பல் உயிர் ஓம்புதல்”பண்பாடு
முனைவர் ப. மணிகண்டன்

கவிதைக்கும் மெய்ப்பாட்டிற்கும் உள்ள தொடர்பு
செ. கயல்விழி

அறநெறி இலக்கியத்தில் தமிழர் மருத்துவம்
அ. குழந்தைசாமி

சிலப்பதிகாரம் காட்டும் நீர் வழிப்பயணங்கள்
சித்ரா.ரா

திருக்குறளில் வாய்மையில் சமரசம்
முனைவர் து. சிவசித்ரா

தமிழில் சொல்லகராதிகள் உருவாக்கமும் பயன்பாடும்
முனைவர் பூ. சேகர்

ஏகன் அநேகன்
அகல்யா தர்மலிங்கம்

Bhakti Marga of Saint Thyagaraja
R. Sudhalakxmi

The Evolution of Tattvas in Samkjya Philosophy
Varun Srivatsan

வேள் பாரிநாவலில் மன்னனும் மக்களும்
பொன். கனகா



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


யாரைக் கேட்டது இதயம் புதினத்தில் சமூகப்பார்வை
அ. சையதுஅலி பாத்திமா

என்.ஶ்ரீராம் கதைகளில் விளிம்பு நிலைமக்கள்
சுதா .மு

மேலாண்மை பொன்னுசாமி படைப்புகள் போற்றும் மானுட பிரவாகம்
கோ. சத்யா

வண்டிப் பாதை நாவல்காட்டும் இயற்கை மருத்துவம்
சு. சத்தியப்பிரியா

பொன்னீலனின் மறுபக்கம் புதினத்தில் சிறு தெய்வங்களும் அதன் வழிபாட்டுமரபுகளும்
திருமதி சு.வினோதா

ஒப்பியல் நோக்கில் சைவ கிறிஸ்துவ குருத்துவம்
பூபாலசிங்கம். தனேஸ்

Representation of Culture in English Language Textbooks
U. Thulasivanthana

பழங்குடி மக்களின் சித்திரைத் திருவிழா சடங்கு முறைகள்
கா. இராஜமாணிக்கம்

பழங்குடி மக்களின் மாட்டுப் பொங்கல் விழா சடங்கு முறைகள்
கா. இராஜமாணிக்கம்

தமிழகக் கல்வெட்டுகளில் கோயில் நிவேதன உணவுகள் - ஓர் ஆய்வு
முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்

கல்வெட்டுகள் வாயிலாக அறியவரும் மருத்துவ செய்திகள்
அ. குழந்தைசாமி



அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி



# தொல்லியல்

# கல்வெட்டுகள் வாயிலாக அறியவரும் மருத்துவ செய்திகள்

# *Medical News Through Inscriptions*

**அ. குழந்தைசாமி** *A.Kulandaisamy*

முனைவர் பட்ட ஆய்வாளர் (தமிழ்), பகுதி நேரம், தமிழாய்வுத் துறை, தேசியக் கல்லூரி (தன்னாட்சி), (பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது), திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு, இந்தியா.

**முனைவர் அ. கிருஷ்ணன் .** *A.Kirushnan.*

நெறியாளர் மற்றும் உதவிப் பேராசிரியர். தமிழாய்வுத் துறை, தேசியக் கல்லூரி (தன்னாட்சி). (பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது), திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு, இந்தியா.

**ஆய்வுச்சுருக்கம் :**

உலக வரலாற்றில் தமிழர் வரலாறு தனிப்பெரும் சிறப்புடையதாகும். தமிழக மூவேந்தர்களில் சோழர்கள் மருத்துவத்துறைக்கு ஆற்றிய பங்களிப்பு அளப்பெரியதாகும். உலகை அடக்கியாள்வதைப் போல் நோய்களையும் அடக்கி ஆளவேண்டுமென்ற ஆர்வம் சோழ மன்னர்கட்கு இருந்துள்ளதை அவர்தம் சாசனங்கள் (கல்வெட்டுக்கள்) வாயிலாக அறியலாம். அந்த வகையில் சோழர் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் வாயிலாக மருத்துவச் செய்திகளை உணர்த்தும் தன்மையை இவ்வாய்வு மேற்கொள்கிறது.

*Research Summary*

***Tamil history is unique in world history. Among the rulers of Tamil Nadu, the contribution of the Cholas to the field of medicine is enormous, as it can be seen from his charters (stone inscriptions) that the Chola king had the desire to control diseases as well as control the world. In that way, this study examines the nature of the doctor's message through the information mentioned in the Chola charter.***

**திறவு சொற்கள்**

1. சோழர்கள்
2. தமிழர் மருத்துவம்
3. இலக்கிய கல்வெட்டு
4. சம்பளங்கள்
5. மருந்து அளவு

**தமிழர் கலாசாரத்தைப் பெருமைப்படுத்தும் கோயில்கள் :**

தமிழர் கலாசாரத்தைப் பெருமைப்படுத்தவும் வேண்டிப் பெரும் கோயில்களைக் கட்டுவித்தனர். இக்கோயில்கள் பல வேறுபட்ட கலைகளின் சங்கமமாகவும், பல்வேறு கலைகள் வளர்க்கப்படும் இடங்களாகவும் திகழ்ந்தன. இவ்வகையில் மருத்துவக்கலையும் வளர்ச்சி பெற்ற இடம் கோயிலாகவே தென்படுகின்றது. குறிப்பாகத் தஞ்சைப் பெருவுடையார் கோயிலை எடுத்துக் கொண்டால் அது அரசின் மத்திய நிர்வாக பீடமாகவும், அதே வேளையில் நாட்டுமக்களுக்குப் பணிபுரியும் பலவேறுபட்ட கருமபீடங்களைக் கொண்ட ஒரு நிறுவனமாகவும் அமைந்திருந்தமையை சிற்பக்கலைகளும் நன்கு மேம்பட்டிருந்தன. கட்டிடம், சிற்பம் அமைப்பதற்கு அடிப்படையான சாந்துக் கலலைகள் பூச்சுகள் என்பனவற்றுக்கு மருத்துவரீதியான அறிவும் ஆலோசனைகளும் அவசியம் என்பதை இத்துறை வல்லாலர்கள் அறிவர் சோழர்காலக் கட்டிடங்களும் சிற்பங்களும் உறுதி பெற்றிருப்பதற்கு மருத்துவ அறிஞர்களின் ஆலோசனைகளும் பெறப்பட்டிருக்கலாம். சோழர் காலத்து காவியங்களான பெரியபுராணம் ,கம்பராமாயணம் இரண்டிலும் காணப்படும் மருத்துவ விடயங்கள் தனித்து ஆராயப்பட வேண்டியவை. திருமந்திரமும் இக்காலத்து நூலே. இந்த இலக்கியச் செய்திகள் மூலமாகவும் மருத்துவக்கலை சோழர் காலத்தில் நன்கு வளர்ச்சி பெற்றிருந்தது என்பதை உணரக் கூடிய தாகவுள்ளது.

**சோழர் கால கல்வெட்டுக்களில் மருத்துவக்கலை வளர்ச்சி :**

மன்னர்கள் மக்களின் பாதுகாவலர் அந்த அடிப்படையில் மருத்துவர்களைப் பேணுவதிலும், மருத்துவமனைகள் அமைப்பதிலும், அவற்றுக்கு மானியங்கள் வழங்குவதிலும் சோழமன்னர்கள் அதிக கவனம் செலுத்தி வந்திருக்கிறார்கள் என்பதைச் சோழர் காலத்துக் சாசனங்கள் உறுதிப்படுத்துகின்றன. **"வைத்தியபோகம்" "வைத்தியபாகம்" "மருத்துவப்பேறு" "வைத்திய விருத்தி"** என்ற சாசனத் தொடர்கள் சோழமன்னர் மருத்துவர்களுக்கு வழங்கிய நலக்கொடையைக் குறிப்பிடுகின்றன. மருத்துவத்துறையில் சூளவம்சம், யாழ்ப்பாண வைபவமலை முதலிய வரலாற்று நூல்களும் சான்றாகின்றன. பழைய சிங்கள மன்னருள் பந்துகாபயன் நோயாளிகளுக்கு விடுதிகள் அமைத்துக் கொடுத்திருக்கின்றான். துட்டகைமுனு (கி.மு 107 - 137) பதினெட்டு இடங்களிற் சிகிச்சை நிலையங்களை அமைத்திருந்தான் . புத்ததாஸ (கி.மு 337 - 365) என்ற மன்னன் மருத்துவனாக விளங்கியதோடு, "சாரார்த்தசங்கிரக" என்ற மருத்துவ நூலையும் இயற்றியிருக்கின்றான். முதலாம் பராக்கிரமபாகு (கி.மு 1153 - 1186) பெரும் மருத்துவமனை ஒன்றை அமைத்திருந்தான் என்றும், ஓய்வு நாட்களில் நோயாளிகளைப் பார்வையிட்டான் என்றும் சூளவமசம் குறிப்பிடுகின்றது. பௌத்த தேவாலயங்களுடன் இணைந்தனவாக ஆதுலர் சாலைகள் செயற்பட்டன என்றும் அறியப்படுகின்து.

**மருத்துவமனை பற்றிய பல்வேறுபட்ட தகவல்கள் :**

வட இலங்கையில் தமிழ் மன்னர் ஆட்சி செய்த காலத்திலும் (கி.பி. 1352 - 1621) தமிழரசர்கள் மருத்துவக் கலையை வளர்த்து வந்திருக்கிறார்கள். என்பதற்கு அக்காலப் பகுதியில் தோன்றிய செகராசசேகரம், பரராசசேகரம் முதலான முக்கூடற் கோயிலில் அமைக்கப்பட்டிருந்த மருத்துவமனை பற்றிய பல்வேறுபட்ட தகவல்களை இக் கல்வெட்டுத் தருகின்றது. இருப்பினும் இக்கல்வெட்டில் சில வரிகள் சரியான முறையில் வாசிக்க முடியாதவாறு சிதைந்து காணப்படுவதால் இதன் முழுமையான செய்திகளும் பெறப்படுமாறில்லை. சோழா காலத்துக்

கல்வெட்டுக்களின் பொதுவான அமைப்புப் போன்றே இக்கல்வெட்டினது தொடக்கமும் சோழ அரசர் குல வரலாறு, அவர்கள் மேற்கொண்ட போர்கள், பெற்ற விருதுகள் என்பனபற்றிக் கூறும் பகுதி கல்வெட்டின் 25% வீதமாக அமைகிறது. அதனைத் தொடர்ந்து, **"மனு நெறி விளக்கிய கோவிராசகேசரிவர்மரான உடையார் ஸ்ரீ வீரராசேந்திர தேவர்க்குயாண்டு ஐஞ்சாவது"** எனத் தொடங்கி இந்த மகாவிஷ்ணு தேவதானத்தில் நிகழும் அனைத்துத் திருநாள் பணிகளுக்கு வழங்கிய **நிவந்தங்கள்** பற்றிக் கூறப்படுகின்றன. அதனைத் தொடர்ந்தே ஆதுலாசாலைக்கு வழங்கிய தானங்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன.

**பணிசெய்தவர்கள் மற்றும் சம்பளங்கள் :**

இக் கல்வெட்டில் ஆதுவர் சாலையுடன் தொடர்புடைய பகுதி இங்கே தரப்படுகிறது: ...."ஆதுல சாலைக்கு வேண்டும் கலமிடுங் குசவனுக்கு நாளொன்றுக்கு நெல்குறுணியும்.... ஆதுலர்க்கும் ஒலிக்கும் கிடைகளுக்கும் பணி செய்யும் பெண்டுகள் இருவர்க்கும் பேரால் நெல் குறுணியும் , பேரர் காசொன்றாகக் காசு இரண்டும், சாத்திரர்க்கும். கிடைகளுக்கும், ஆதுவர்க்கும் கிடக்கப் பாய் எழுபத்தைஞ்சு காசு இரண்டும், கிடைகளுக்கும் சாத்திரர்க்கும்... ஆண்டொன்றிற்கு சனி ஐம்பத்தொன்றுக்கு எண்ணெய் நூற்றிரு நாழிக்கும்... ஆதுலர்சாலை வீரசோழனில் வியாதிப்பட்டுக் கிடப்பார் பதினைவருக்குப் பேரால் அரிசி தாழிஆக, அரிசிகுறுணி, ஏழுநாழிக்கு நெல்தூணி, ஐநாழியுறியும் வியாதிப்பட்டுக் கிடப்பார்க்கும், பலபணி நிமந்தக்காரருக்கும் கிடைகளுக்கும் சாத்திரர்க்கும் வைத்யன்... பேருடைய ஆழப்பாக்கத்து சவர்ணன் கோதண்டராமன் அன்வத்தாமபட்டனுக்கு நாளொன்றுக்கு நெல் முக்குறுணியும், காசு எட்டும், சல்லியக்கிரியை பண்ணுவான் ஒருவனுக்கு நாள் ஒன்றிற்கு நெல் குறுணியும், ஆதுலர்க்கு மருந்துக்களுக்கும் வேண்டும் மருந்து பறித்தும் விறகிட்டும் பரியாரம் பண்ணுவார் இருவருக்குப் பேரால் நாள் ஒன்றிற்கு நெல்குறுணி ஆக நெல் பதக்கும் போரார் காசொன்றாகக் காசிரண்டும். ஆதுலர்க்கு வேண்டும் பரியாரம் பண்ணி மருந்திடும் பெண்டுகள் இருவருக்குப் பேரால் அரிசி நாழியாக நாளொன்றுக்கு நெல்குறுணியும், பேரார் காசு அரையாகக் காசொன்றும். ஆதுலர்க்கும் கிடைகளுக்கும் சாத்திரர்க்கும் வேண்டும் பணி செய்யும் நாவிதன் ஒருவனுக்கு நாள் ஒன்றுக்கு நெல் நானாழியும், ஆதுரசாலை வீரசோழனில் ஆண்டொன்றில் இடும் மருந்து பிராம்யம் கடும்பரை ஒன்றும் கறுங்காய்நீங்க இப்பதி வாசாகரீதகீப்பட்டை யிரண்டும். தசமூல கரீதக்கிபட்டை ஒன்றும். பலாதக்க கரீதகிப்பட்டை ஒன்றும், பலாகேரண்ட தைலம் தூணியும், பஞ்சக தைலம் தூணியும், லசுனாடியேரண்ட தைலம் தூணியும், உத்த மகானாடி தைலம் தூணியும். பில்வாடிகறி தம்பதக்கும் மண்டூரக வடகம் இரண்டாயிரமும், ட்ராவத்தினாழியும் விமலை இரண்டாயிரமும், சுகேத்திரி யிரண்டாயிரமும், தம்றாடை இரண்டாயிரமும், வயிரகல்பன் தூணிப் பதக்கும் கல்யாண லவணன் தூணியதக்கும். இவை யடுகைக்கு வேண்டும் மருந்துகளுக்கும்... உள்ளித்தன கொள்ளவும் ஆண்டுதோறும் புராணசர்ப்பை புடைக்கப் பசுவின் நெய் பதக்கும் கொள்ளவும் காசு நாற்பதும், ஆதுரசாலையில் இரா எரியும் விளக்கொன்றுக் கெண்ணெய் ஆழாக்காக நாள் முன்னூற்றறுபதுக்கு, எண்ணெய் நாற்பத்தி ஐஞ்ஞாழிகைக்கு காசு இரண்டேகாலும்... பங்குனி உத்திரந் தொடங்கிப் புரட்டாதித் திருவோணத்தளவும் பரம்பாலூறத் தண்ணீர் கொடுவந்த வயிற்றுச் சாய்ப்பான் ஒருவனுக்கு நாள் ஒன்றுக்கு நெல் குறுணியாக நாள் நூற்றெண்பதுக்கு நெல் பதினைங்கலமும்... இலாமிச்சத்துக்கும் நெல் இரு..பதக்கும்... இப்படி யாண்டு ஆறாவது நிமந்தஞ் செய்த..." என்ற செய்திகளைக் கூறி, இறுதியில் இக் **கல்வெட்டினைப் பொறிப்பித்தோரும்,** பொறித்தோரும் சுட்டிய பெயர்களைக் கொண்டதாக இச்சாசனம் முற்றுப் பெறுகிறது. முக்கூடற் கோயிலுக்குரிய தானங்களையும், ஆங்கமைந் திருந்த ஆதுலர்சாலைக்குக் கொடுக்கப்பட்ட ஓரண்டுக்குரிய பொருட்கள், வசதிகள், சம்பளங்கள், மருந்துகள் முதலான விடயங்களையும் கூறும் இச்சாசனதிலிருந்து பெறப்படும் சோழர்கால மருத்துவச் செய்திகள் இங்கே விரிவாக ஆராயப்படுகின்றன.

**ஆதுலசாலை வீரசோழன் :**

இம் மருத்துவமனைக்யைக் கட்டிய அரசன் பெயர் வீர இராசேந்திரசோழன். இம்மருத்துவமனைக்கும் அவனது சுருக்கப்பெயரான (வீர...+.சோழன் 'வீரசோழன்" என்ற பெயர் வைக்கப்பட்டு இது **"அதுலசாலை வீர சோழன்"** என்ற பெயரால் வழங்கிற்று. இம் மருத்துவ மனையிற் பதினைந்து நோயாளிகள் படுப்பதற்குரிய வசதிகள் செய்யப் பட்டிருந்தன. பாய்களிலேயே நோயாளிகள் படுத்தனர். இக்கோயிலின் ஜனநாத மண்டபத்திலும் ஆதுலச்சாலையிலும் பயன்படுத்துவற்காக இருகாசு பெறுமதியுள்ள 75பாய்கள் வாங்கப்பட்டிருந்தன. இந்த ஆதுலர்சாலையில் மருத்துவர் இருவர், பரிசாரகர் இருவர் மருத்துவப் பெண்டுகள் இருவர், தண்ணீர் வழங்குவோன் ஒருவன். ஒரு காவலாளி, ஒரு நாவிதன், ஒரு சலவைத் தொழிலாளி என்போரும் ஊழியர்களாக நியமிக்கப் பட்டிருந்தனர் என்ற செய்திகளும் அறியப்படுகின்றன.

**மருத்துவர், - நோயாளிகள் (ஆதுலர்) :**

இந்த ஆதுலர்சாலையிற் பதினைந்து நோயாளிகள் தங்கியிருந்தனர். இவர்கள் வியாதிப்பட்டுக் கிடப்பார்' எனவும் ஆதுலர்' எனவும் அழைக்கப்பட்டனர். இவர்களுக்கு இலவச உணவு. மருந்து, தலைக்கு எண்ணெய் என்பன வாழங்கப்பட்டன. இதன் பொருட்டு நோயாளி ஒவ்வொருவருக்கும் தினமும் ஒரு நாழி அரிசி என்ற அடிப்படையில் 15 நோயாளருக்கு உரிய அரிசியும் மொத்தமாகக் கொடுக்கப்பட்டிருந்தது. இக்கோயிலில் கடமையாற்றும் பல்வேறுபட்ட ஊழியர்களுக்கும், அங்கு தங்கிப்பயிலும் ஆசிரியர் மாணவர்களுக்கும். இந்த ஆதுலர் சாலையிலுள்ள நோயாளிகளுக்கும் மருத்துவ போதனைகளையும், சிகிச்சையினையும் அளிப்ப தற்கென ஒரு பொது மருத்துவர் நியமிக்கப்பட்டிருந்தார். இக் கல்வெட்டுப் பொறித்த காலத்தில் இந்த ஆதுலர்சாலையிலே நியமிக்கப்பட்டிருந்த மருத்துவனின் பெயர் **"ஆழப்பாக்கத்து சவர்ணன் கோதண்டராமன் அஸ்வத்தாமபட்டன்"** என்பதாம். இம் மருத்துவனுக்குத் தினமும் முக்குறுணி நெல்லும், எட்டுக் காசும் சம்பளமாகக் கொடுக்கப்பட்டன. அத்தோடு அறுவை சிகிச்சை செய்வற்குரிய மருத்துவர் ஒருவரும் (சல்லியக் கிரியை பண்ணுவான்) நியமிக்கப்பட்டிருந்தார். இவருக்கு நாட் சம்பளமாக ஒருகுறுணி நெல் மட்டுமே வழங்கப்பட்டிருந்தது. அக்காலத்தில் அறுவைச் சிகிச்சை வளர்ச்சி பெற்றிருக்கவில்லை என்பதும். இத்தொழில் புரிவாருக்கு அதிக மதிப்பு இருக்கவில்லை என்பதும் சம்பள ஒப்பீட்டு நோக்கில் உணரப்படுகின்றன. இந்த ஆதுலாசாலைக்கு ஓராண்டுக்குத் தேவையான மருந்துக்களும் அவற்றின் அளவுகளும் இச்சாசனத்திற் குறிப்பிடப்படுகின்றன. சிலமருந்துப் பெயர்கள் வாசிக்க முடியாதவாறு சிதைந்து காணப்படுகின்றன. ஆம்மருந்துப் பெயர்களும் அதன் அளவுகளும் இங்கே தரப்படுகின்றன. பெறுமதியுடையவையெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவை நாற்பதுகாசுப் பெறுமதியுடையவையெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**மருந்துப் பெயர்- அளவு :**

பிராமயம் கடும்பரை ஒன்று வாசாகரீதகிப்பட்டை (ஆடாதோடை மஞ்சள்) இரு படி துசமூலம் கரீதகிப்பட்டை இரு படி பலாதக்க கரீதகிப்பட்டை ஒரு படி பலாகேரண்டக தைலம் (சிற்றாமட்டி ஆமணக்கு) தூணி பஞ்சக தைலம் தூணி லசுநாதியேரண்ட தைலம் தூணி உள்ளி ஆமனக்கு உத்தமகர்னாடி தைலம் (உத்தமாகாளி தைலம்) தூணி சாக்ஜீதம் பதகுக் வில்வாதி

சறிதம் (வில்வாதி தைலம்) பதக்கு மண்டூரக வடகம் (இரும்புச்சத்துடைய தாதுப்பொருள்), 2000 திராவத்தி (திராவகத்தீநீர்) நாழி விமலை 2000 சுனேத்திரி 2000 தம்றாடை 2000 வயிரகல்பம் ஒரு தூணி ஒரு பதக்கு கல்யாணலவணம் ஒரு தூணி ஒரு பதக்கு பசுவின் நெய் பதக்கு இரவு எரியும் எண்ணெய் (ஒரு நாளுக்கு ஒரு ஆழாக்கு வீதம் ).

**பரிசாரகர் - மருத்துவத் துணையாளர்:**

நோயாளிகளைப் பரிசோதித்து தேவையான மருத்துகளையும் சிகிச்சை முறைகளையும். மருத்துவர் எழுதிக்கொடுக்க அவற்றைச் செயற்படுத்துவோர் மருத்துவருக்குத் துணையாயுள்ள பரிசாரகரே ஆவார். இங்கு குறிப்பிடப்படும் ஆதுலர்சாலையிலுள்ள நோயாளிகளுக்கு வேண்டிய மருந்துகளைத் தயாரிப்பதற்குரிய மூலிகைகளையும் மருந்துச் சரக்குகளையும் தேடிப்பெறவும். அவற்றைத் தயாரிப்பதற்கு வேண்டிய விறகுகளைச் சேகரிக்கவும் இரு ஆண்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்கள் ஒவ்வெருவரும் நாளொன்றுக்கு குறுணி நெல்லும், ஒரு காசும் பெற்றனர். இவர்களோடு நோயாளிகளுக்குப் பரியாரம் செய்வதோடு மருந்து கொடுக்கும் பொருட்டும் **"மருந்திடும் பெண்டுகள்"** இருவரும் நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்கள் ஒவ்வொருவருக்கும் தினமும் ஒருநாழி அரிசியும், அரைக்காசும் சம்பளமாக வழங்கப்பட்டன.

**சிற்றூழியர்கள்:**

மருத்துவமனையிலும் கோயிற்பணியிலும் கோயில் ஜனநாத மண்டபத்தையும் காவல் புரிவதற்காக ஒரு **'திருமெய்க்காவல்'** என்ற பட்டத்துடன் திரு முக்கூடலில் வாழ்ந்த பேரையன் என்பவன் நியுமிக்கப்பட்டிருந்தான். இவனுக்குத் தினமும் நான்கு நாழி நெல்லும், ஒரு காசும் சம்பளமாக வழங்கப்பட்டன. தமிழகத்திற் பொதுவாக பங்குனி முதல் புரட்டாதி வரையுமுள்ள காலங்களிலே குடி நீத்தட்டுப்பாடு ஏற்படுதல் வழக்கம். இந்நிலைமை சோழர் காலத்திலும் இருந்திருக்க வேண்டும். இதனாற் போலும் இந்த ஆதுலர்சாலையில் மேற்குறிப்பிட்ட காலங்களிலே தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்படாதிருக்கும் வகையிற் பிற இடத்திலிருந்து நீர் கொண்டு வருவதற்கென ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். இவருக்குத் தினமும் ஒரு குறுணி நெல் வழங்கப்படுவதாயிற்று. அடுத்து, மருத்துவ மனையில் மருந்துகள் தயாரிபப்பதற்கு விதம்விதமான மட்பாண்டங்கள் தேவைப்படும். அவற்றை வேண்டிய போது, வேண்டியாங்கு செய்து கொடுப்பதற் கென ஒரு குயவனும் இந்த ஆதுலர் சாலையிலே நியமிக்கப்பட்டிருந்தான். இவனுக்குரிய தினப்படி ஒருகுறுணி நெல்லாகும்.

**முடிவுரை:**

தமிழ் மருத்துவ வரலாற்றை அறிந்து கொள்வதற்குத் தமிழ் இலக்கியச் செய்திகளே பெரிதும் துணையாகவுள்ளன. அந்த வரிசையிற் சோழர் காலத்துச் சாசன செய்திகளைக் மருத்துவ இலக்கியங்களும் காணப்படுகின்றன. அக்காலச் சாசனங்கள் அனைத்தையும் இதே கண்ணோட்டத்தில் அணுகினால் மேலும் பல செய்திகள் கிடைக்க வாய்ப்புண்டு. மருத்துவச் செய்திகள் என்று கூறும் போது அவற்றை நான்காக வகுத்துக் கொள்ளலாம். அவை **நோயாளி, மருத்துவன்,மருந்து, பரிசாரகன்** என்பனவாம். **"மருத்துவத்தின் நாக்கு தூண்கள்"** இவை என கருதப்படுபவையாகும். இச்சாசனத்தைப் பொறுத்தவரையில் '**ஆதுலசாலை வீரசோழன்**' என்ற

மருத்துவ மனையைப் பற்றிக்கூறுவதோடு. மேற்குறிப்பிட்ட நான்கு விடயங்கள் பற்றிய விரிவாகத் தரப்பட்டுள்ளன. செய்திகளும் அத்துடன் ஓராண்டுக்குரியதான களஞ்சியப்படுத்தி வைக்கக்கூடிய மருந்துப்பொருட்களின் விபரமும் கூறப்படுகின்றன. இக்கோயிலும் இம் மருத்துவமனையும் சோழர் காலத்தே ஒப்பீட்டளவிற் சிறியனவே. சிறிய அளவில இயங்கிய இந்த ஆதுலர்சாலை வரையறுக்கப்பட்ட ஒழுங்குகளுடன் செயற்பட்டமையை இச் சாசனம் கூறுகிறது. எனவே பெருங்கோயில்களில் அமைந்திருந்த ஆதுலர்சாலைகள் மேலும் சிறப்புடன் அமைந்து மக்களுக்கு மருத்துவசேவைகளை வழங்கி இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

**ஆய்வுத்துணை நூல்கள்:**


1.க.நா.சித்த மருத்துவம் - ஐ சென்னை, அரசியலாளர் அச்சகம், - 1954.

2. குறுந்தொகை -அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்நூல் வெளியீடு - 1995.

3. கைலாசபதி க. இலக்கிய சிந்தனை, யாழ்ப்பாணம், - 1988.

4. சாமி. பி. எல். - சங்க இலக்கியத்திற் செடி, கொடி விளக்கம், திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், - 1977.

5. சித்தர் ஞானக்கோவை - (பதிப்பு) மே.வி வேணுகோபாலபிள்ளை, 2ஆம் பதிப்பு, சென்னை - 1927.

6 . சிலப்பதிகாரம் - அடியார்க்கு நல்லார் உரை. உ.வே. திருக்குறள் மூலமும் சாமிநாதையர் பதிப்பு. பதிப்புக் கழகம், - 1944.

7. பரிமேலழகர் உரை - சென்னை, சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், - 1944.

8. திருமந்திரம் - வே. விசுவநாதபிள்ளை பதிப்பு, சென்னை - 1912.

ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2024, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்-அக்டோபர் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் அக்டோபர் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com